## 151. என்னத்த உண்போம் என்னத்த

### பல்லவி

என்னத்த உண்போம் என்னத்த குடிப்போம்
என்னத்த உடுப்போம் கவல படாதே

### அனுபல்லவி

கவலபடுவதினால் எதையும் கூட்டமுடியாதே
கவலபடுவதினால் எதையும் குறைக்கமுடியாதே

### சரணங்கள்

1. காட்டு புஷ்பத்தை கவனித்துப்பாரு
உழைப்பதில்ல நூற்பதில்ல
அவற்றை உடுத்தின தேவனே
உனக்கு உடுத்த மாட்டாரோ
- என்னத்தை

2. ஆகாய பறவையை கவனித்துப்பாரு
விதைப்பதில்ல அறுப்பதுமில்ல
அவற்றை போஷிக்கும் தேவனே
உன்னை போஷிக்காமல் விடுவாரோ
- என்னத்தை

3. நாளைகுறியதை தேவன் பார்ப்பார்
இன்றைக்கு இருப்பதில் மகிழ்ச்சியாயிரு
அன்றன்று நாளுக்குறியதை
தேவ கரத்தில் பெற்றுகொள்ளு
- என்னத்தை